**செ.வெ.எண். 145** **நாள் - 20.03.2025**

## பத்திரிக்கைச் செய்தி

நம் தாய் நாட்டிற்காக தங்களது இளம் வயதை இராணுவப் பணியில் கழித்து பணிக்காலம் நிறைவு பெற்று ஓய்வு பெற்ற முன்னாள் படைவீரர்களது பாதுகாப்பான வாழ்க்கையினை உறுதி செய்திடவும், வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்காக பிரத்யேகமாக ***காக்கும் கரங்கள்*** என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் முன்னாள் படைவீரர்கள், முன்னாள் படைவீரர்களின் மறுமணம் ஆகாத கைம்பெண்கள், மணமாகாத கணவனை இழந்த மற்றும் கணவனைப் பிரிந்த முன்னாள் படைவீரர்களின் மகள்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.

இந்த திட்டத்தின் மூலம் புதியதாக தொடங்கப்படும் தொழில்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையில் 30 விழுக்காடு மூலதான மானியமும், 3 விழுக்காடு வட்டி மானியமும் வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் அதிக பட்சமாக ஒரு கோடி ரூபாய வரை வங்கிக் கடன் பெறலாம்.

இத்திட்டத்திற்கான வழிமுறைகள் :-

1. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் விதவையர்களுக்கு அதிகபட்ச வயது உச்சவரம்பு இல்லை
2. முன்னாள் படைவீரர்களின் திருமணமாகாத மகள், முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்கள் மற்றும் படைப்பணியின் இறந்த படைவீரரின் மனைவிக்கு குறைந்த பட்ச 21 வயது மற்றும் அதிகபட்சம் வயது உச்சவரம்பு இல்லை.
3. முன்னாள் படைவீரரின் திருமணமாகாத மகன் வயது வரம்பு 25-க்குள் இருத்தல் வேண்டும்.
4. முன்னாள் படைவீரரின் மகன் 25 வயதிற்கு மேல் உள்ளவர் எனில் முன்னாள் படைவீரருடன் இணைந்து co-applicant ஆக பங்குதாரராக செயல்படலாம். இதில் முன்னாள் படைவீரர் முதன்மை விண்ணப்பதாரராக இருப்பார். பங்குதாரராக( Partnership) இருத்தல் வேண்டும்.
5. தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்டவராக இருத்தல் வேண்டும். இதற்கென குறைந்த பட்ச படிப்பு தகுதி ஏதும் இல்லை.
6. இந்த திட்டத்தின் கீழ் பயன்பபெற வருமான வரம்பு ஏதும் இல்லை. இந்த திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் ஏற்கனவே மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படும் இதைப்போன்ற திட்டங்களில் பயன்பெற்றிருக்கக்கூடாது.

எனவே இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்கள் www.exwel.tn.gov.in என்ற இளையதள முகவரி மூலமாக விண்ணப்பிக்கலாம். மேலும் உதகமண்டலம், கூட்ஷெட் சாலையில் அமைந்துள்ள முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தினை நேரிலோ அல்லது தொலைபேசி எண். 0423 – 2444078 மூலாமாக அணுகி அதிக அளவில் பயன் அடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, இ.ஆ.,ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.**

NilgirisPRO ProNilgiris NilgirisPRO